**STARTING TIME 11.52 A.M**

**IN THE COURT OF SPECIAL SUBORDINATE JUDGE (LAOP), ARAKKONAM.**

**O.S. No. 141/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Gr. II Bench Clerk of this court, on 28.10.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : **தனசேகரன்** | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1. இந்த வழக்கில் உள்ள எ, பி, சி, டி அயிட்ட சொத்துக்களின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். எ–அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் 40 செண்ட் ஆகும். தாவா சர்வே எண்.730/1 எ 2–ன் விஸ்தீரணம் என்னவென்றால் 21 செண்ட் ஆகும். சி–அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் 49.5 செண்ட் ஆகும். டி–அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் 14 செண்ட் ஆகும்.**

**2. எ அயிட்ட சொத்தின் செக்பந்தி தெரியுமா என்றால், கிழக்கில் ரோடும், மேற்கில் சர்வே எண். 730/1 பி–ல் பஞ்சாட்சரம் கோட்டி முதலியார் நிலம், வடக்கு பக்கம் ஆறுமுகம் முதலியார் நிலம், தெற்கில் எனது தம்பி ருக்மாங்கதன் நிலமும் உள்ளது.**

3. பி –அயிட்ட சொத்தின் செக்பந்தி என்னவென்றால் கிழக்கில் 730/1 பி–ல் பஞ்சாட்சரம் கோட்டி முதலியார் நிலம், மேற்கில் ரோடு, வடக்கு தெற்கில் ருக்மாங்கதன் நிலமும் உள்ளது. தாவா சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் ஏக்கர் 1.64 செண்ட் ஆகும்.

4. ஏக்கர் 1.64 செண்ட்–ல் பிரதிவாதிகளுக்கும் எங்களுக்கும் எந்த சொத்து சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் தாவா பி அயிட்ட சொத்தான 730/1 எ 2 சம்பந்தமாக பிரச்சனை உள்ளது. மற்ற 3 அயிட்ட சொத்துக்கள் சம்பந்தமாக எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே பிரச்சனை ஏதும் உள்ளதா என்றால், இல்லை.

5. தாவா சொத்துகள் எங்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால், 1951ம் ஆண்டு பொன்னம்மாள் என்பவர் ஏக்கர் 3.36 செண்ட் கிரையம் பெற்றார். அதன் பிறகு 1972ம் ஆண்டு பொன்னம்மாள் என்பவரிடமிருந்து, கோட்டி முதலியார் என்பவர் ஏக்கர் 2.66 செண்ட் சொத்தை கிரையம் பெற்றார். அதன்பிறகு 1981ம் ஆண்டு கோட்டி முதலியாருக்கும், அவரது மகன்களான 1ம் பிரதிவாதி பஞ்சாசரம் என்பவருக்கும் மற்றும் வெங்கடேசன் என்பவருக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது. அந்த பாகத்தில் பி– அட்டவணையில் உள்ள ஏக்கர் 1.43 செண்ட் நிலம் வெங்கடேசன் என்பவர் பாகமும், சி – அட்டவணையில் உள்ள ஏக்கர் 1.03 செண்ட் நிலம் பஞ்சாட்சரம் பாகமாகவும், மீதி 20 செண்ட் மேற்படி கோட்டி முதலியார் என்பவருக்கு எ – அட்டவணை சொத்தாக பாகம் ஒதுக்கப்பட்டது. ஆனால் பாகப்பிரிவினை பத்திரத்தில் 20 செண்ட்க்கு பதிலாக கோட்டி முதலியாருக்கு 90 செண்ட் என தவறாக எழுதப்பட்டுள்ளது.

6. 1981ம் ஆண்டு எழுதி கொள்ளப்பட்டதாக சொல்லும் வா.சா.ஆ–3 பாகப்பிரிவினை பத்திரம் செல்லுமா செல்லாதா என்றால், 90 செண்ட் என எழுதப்பட்டதை பொறுத்து தவறு ஆகும். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில்

கோட்டி முதலியாரும் அவருடைய இரு மகன்களும் கையெழுத்து செய்துள்ளனர் என்றால் சரிதான். வா.சா.ஆ–3 பாகப்பத்திரத்தில் கோட்டி முதலியாருக்கு 20 செண்ட் பாகம் ஒதுக்குவதற்கு பதிலாக தவறாக 90 செண்ட் ஒதுக்கப்பட்டது என எனது தாவாவில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லி உள்ளோம். தாவாவில் அதுபோல் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

7. பொன்னமாள் கிரையம் பெற்ற சொத்துக்களில் கோட்டி முதலியாருக்கு விற்பனை செய்த ஏக்கர் 2.66 செண்ட் போக மீதி எவ்வளவு நிலம் பொன்னம்மாளுக்கு சொந்தம் என்றால் 70 செண்ட் ஆகும். எனது தாவாவில் பொன்னம்மாள் என்பவர் ஏக்கர் 3.66 செண்ட் கிரையம் பெற்றார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அது தவறாகும், தட்டச்சு பிழையாக 3.36 என்பதற்கு பதிலாக 3.66 என சொல்லப்பட்டுள்ளது.

8. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான் என்றால் சரிதான். கையெழுத்து செய்யும் போது வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

9. பொன்னம்மாள் மீதம் வைத்துக் கொண்ட 70 செண்ட் நிலத்தை என்ன செய்தார் என்றால், 21 செண்ட்டை எனது தம்பியான 2ம் வாதிக்கு உயில் சாசனமாகவும், 20 செண்ட்டை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துள்ளார், மீதி 29 செண்ட் நிலம் பொன்னம்மாள் பெயரிலேயே உள்ளது. தாவா பி– அட்டவணை சொத்திற்காக வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது தம்பி பெயரில் எழுதி கொடுத்த உயில் சாசனம், எங்கள் தரப்பில் ஏற்கனவே வா.சா.ஆ–9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. பொன்னம்மாள், 1ம் பிரதிவாதிக்கு 20 செண்ட் நிலம் கிரையம் செய்து கொடுத்ததை நான் ஒப்புக் கொள்கிறேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ–9 உயில் சாசனத்தில் யார் சாட்சி கையெழுத்து செய்தார் என்றால், முதல் சாட்சியாக

நானும், 2 வது சாட்சியாக கோவிந்தராஜ் என்பவரும் கையெழுத்து செய்தோம். சம்பந்தமூர்த்தி என்ற ஆவண எழுத்தர் உயில் சாசனத்தை தயார் செய்தார். வா.சா.ஆ–9 உயில் சாசனத்தில் அடித்தல் திருத்தல் உள்ளது என்றால் சரியல்ல, வரி பிளவுதான் உள்ளது. அதுபோல் வரிபிளவு செய்யப்பட்டதாக ஆவண எழுத்தர் எழுதி உள்ளாரா என்றால், எழுதி உள்ளார். வா.சா.ஆ–9 உயில் சாசனம் எங்களால் வழக்கிற்காக வேண்டி தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

11. வா.சா.ஆ–9 உயில் சாசனம் எழுதிக் கொடுத்த போது உயில் சாசனத்தில் உள்ள சொத்தை பொன்னம்மாளுக்கு சொந்தமாக இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக வேண்டி உயில் சாசனத்தை பொய்யாக தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

ENDING TIME 12.34 P.M

(Sd/.G.Yuvaraj)
Special Subordinate Judge,
Arakkonam.